பகிர்மான
திவேட்டு எண் 3216

தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை - 600 006

ந.க.எண். 24689 / அ4 / இ1 / 2019, நாள். 12.08.2022

*****

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - 2020-2021ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவித்தல் - ஆணை வெளியிடப்பட்டது சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண். 24689/அ4/இ1/2019, நாள். 09.10.2019, 05.03.2020, 23.03.2020, 15.07.2020 மற்றும் 25.08.2020.
2. அரசாணை (நிலை) எண். 125, பள்ளிக் கல்வித் (ப.க.4(1)) துறை, நாள். 16.12.2020

******

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிருவாகம் / அலுவலகம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்குப் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியரல்லா பணியிடங்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்களில் பணியாளர் நிர்ணயம் தொடர்பாக அரசுக்குக் கருத்துரு பார்வை (1)ற்காண் கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டு, பணியாளர் நிர்ணயம் சார்பாக நெறிமுறைகள் வகுத்து பார்வை (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய 2022-2023ஆம் ஆண்டின் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உத்தேசமாக ஆசிரியரல்லாத பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, மாவட்டவாரியான கணக்கீடு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு பணியாளர்கள் நிர்ணயம் செய்வது குறித்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்குக் கீழ்க்கண்டவாறு விவரங்கள் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிவாரியாக உபரி எனக் கண்டறியப்படும் உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்களில் பணியாளர்கள் பணிபுரிந்து வந்தால், அப்பணியிடம், பணியாளருடன் உபரி (Surplus with person) என்பதால் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவையுள்ள (Need) அருகாமையில் உள்ள பள்ளிக்கு, அப்பள்ளியில் கடைசியாகப் பணியில் சேர்ந்த இளையவரைப் (Station Junior) பணிநிரவல் செய்யப்பட வேண்டும்.

அதே போன்று, இணைப்பில் கண்டுள்ளவாறு உபரி எனக் கண்டறியப்பட்டுள்ள உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்கள் காலியாக இருப்பின் (Surplus post without person) மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவற்றை அருகாமையில் உள்ள தேவையுள்ள (Need) பள்ளிக்குப் பணியிடத்தினைப் பகிர்ந்து அளித்திடல் வேண்டும் (Distribution of Surplus posts without person).

(த.பி.பா.)

அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியரல்லாப் பணியிடங்களைப் பகிர்ந்தளித்தல் குறித்து அறிவுரைகள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

I. அரசாணை (நிலை) எண். 125, பள்ளிக் கல்வித் (ப.க.4(1)) துறை, நாள். 16.12.2020ன் அடிப்படையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்கள் அனுமதிக்கக் கீழ்க்கண்டவாறு மாணவர்களின் எண்ணிக்கை (Fixation of Norms) அடிப்படையில் (இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| பதவி | மாணவர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 500–க்கு கீழ் | 501-1000 | 1001 – 2000 | 2000–க்கு மேல் |
| உதவியாளர் | – | – | 1 | 1 |
| இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | 1 |
| பதிவறை எழுத்தர் | – | 1 | 1 | 1 |

II. பள்ளிவாரியாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் / உபரியாக உள்ள பணியிடங்கள் / தேவை உள்ள விவரங்கள் கணக்கிட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

III. பள்ளிவாரியாக உபரி எனக் கண்டறியப்பட்டுள்ள உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்கள் சார்ந்து கீழ்க்காணுமாறு இரண்டு வகையாகப் பட்டியல் மாவட்ட அளவில் தயாரிக்கப்பட வேண்டும். (Surplus post with person / without person).

IV. பள்ளிவாரியாக உபரி எனக் கண்டறியப்பட்டுள்ள உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்களில் பணியாளர்கள் பணிபுரிந்து வந்தால் பணியாளருடன் உபரி (Surplus post with person) என்பதால் பள்ளிவாரியாக விவரங்களைப் பெற்று, அதன்பின் மாவட்ட அளவில் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். ஒரு பள்ளியில் ஒன்றிற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்தால் அவர்களில், கடைசியாக அப்பள்ளியில் பணியில் சேர்ந்துள்ள இளையவர் (Station Junior) என்ற அடிப்படையில் இளையவர் கண்டறியப்பட்டு அருகாமையிலுள்ள இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு தேவையுள்ள (Need) பள்ளிக்குப் பணி நிரவலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

V. அது போலவே உபரி எனக் கண்டறியப்பட்டுள்ள உதவியாளர் / இளநிலை உதவியாளர் / பதிவறை எழுத்தர் பணியிடங்கள் காலியாக இருப்பின் (Surplus post without person) இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு தேவையுள்ள (Need) பள்ளிகளுக்கு மாவட்டத்திற்குள் பகிர்ந்தளிக்க ஏதுவாகப் பணியிடம் அனுமதிக்கப்பட்ட அரசாணை எண்ணுடன் (Post sanctioned G.O.) பட்டியலிடப்பட வேண்டும்.

(த.பி.பா.)

VI. மாவட்ட அளவில் பணியாளருடன் உபரி ((Surplus post with person) எனப் பட்டியலிடப்பட்டவர்களை, மாவட்டத்திற்குள் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பணி நிரவல் செய்த பிறகு, மாவட்டத்திற்குள் பணி நிரவல் செய்யத் தேவை இல்லையெனில் (Not Needed) அப்பணியாளர்களின் பெயர்ப் பட்டியல் இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

VII. அது போலவே மாவட்ட அளவில் பணியாளர் இன்றி உபரி (Surplus post without person) எனக் கண்டறியும் பணியிடங்களை இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு தேவை உள்ள பள்ளிகளுக்கு மாவட்ட அளவில் பகிர்ந்தளித்த பின்னர், எஞ்சிய உபரிப் பணியிடங்கள் இருப்பின், ஒப்பளிக்கப்பட்ட அரசாணை எண் குறிப்பிட்டு (Post sanctioned G.O.), அப்பணியிடங்களின் பெயர்ப் பட்டியலை இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

VIII. ஒரு சில மாவட்டங்களில் பணி நிரவல் / உபரிப் பணியிடங்களைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்ட பின்னர், மேலும் கூடுதல் தேவை இருப்பின் அது குறித்த பள்ளிவாரியான பெயர்ப் பட்டியல் இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

IX. மேற்படி பணியாளர் நிர்ணயம் சார்ந்த பள்ளி / அலுவலகத்தின் அளவைப் பதிவேட்டில் உரிய பதிவுகளை அரசாணை எண்ணுடன் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும்.

X. இப்பணியிடம் பகிர்ந்தளித்தல் தொடர்பான விவரங்களைக் குறித்த பதிவுகள் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் (EMIS) மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுரைகளின் அடிப்படையில் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் பணிநிரவல் / உபரிப் பணியிடங்களைப் பகிர்ந்தளித்தல் சார்பான பணிகளை மாவட்ட அளவில் உடனடியாக மேற்கொண்டு, அதன் பின்னர் கீழ்க்குறிப்பிட்ட 5 இனங்கள் தொடர்பான அறிக்கையினை அனுப்பி வைக்க அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது,

1. பணிநிரவல் செய்யப்பட்ட பணியாளர்களின் பெயர் விவரப் பட்டியல் .
2. உபரிப் பணியிடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பள்ளிகளின் பெயர் விவரப் பட்டியல்.
3. மாவட்டத்திற்குள் உபரிப் பணியாளர்களைப் (Surplus post with person) பணிநிரவல் செய்ய இயலாத நிலை இருப்பின், அப்பணியாளர்களின் பெயர் விவரப் பட்டியல்.
4. மாவட்டத்திற்குள் உபரிப் பணியிடங்கள் (Surplus post without person) பகிர்ந்தளிக்க இயலாத நிலை இருப்பின், அப்பணியிடங்களின் பெயர் விவரப் பட்டியல்.
5. மாவட்டத்திற்குள் பணிநிரவல் / பணியிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரும் கூடுதல் தேவையிருப்பின், பணியிடம் வாரியாகப் பள்ளிகளின் பெயர் விவரப் பட்டியல்.

இணைப்பு : பட்டியல்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர் -

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
(பெயரிட்ட உறையில்)

12/8/2022